**இலங்கை கல்வி நிர்வாக சேவை I ஆம் தர உத்தியோகத்தர்களை மாகாணக் கல்வித் திணைக்களங்களில் மாகாணக் கல்விப் பணிப்பாளர் பதவிகளில் நியமித்தல் கட்டமைக்கப்பட்ட நேர்முகத் தேர்வுக்காக ஈடுபடுத்துவதற்குரிய அங்கீகரிக்கப்பட்ட மதிப்பெண் நடைமுறை**

**1. சேவை அனுபவம்** **அதிகபட்ச மதிப்பெண் 30**

(இலங்கை கல்வி நிர்வாக சேவை பிரமாணக்குறிப்பிற்கமைய அடிப்படை தகைமைகளின் கீழ் காட்டப்பட்டுள்ள இ.க.நி.சே. 1 ஆம் தரத்தில் 05 வருடங்களுக்கு குறையாத திருப்திகரமான சேவைக்கு மேலதிகமாக இ.க.நி.சே. 1 ஆம் தரத்தில் தொடர்ச்சியான மற்றும் திருப்திகரமான சேவைக்காலத்திற்காக வருடமொன்றுக்கு 02 புள்ளிகள் வழங்கப்படும். அவ்வாறு 12 மாத காலத்திற்கு மாத்திரம் ஒரு வருடத்திற்குரிய புள்ளிகள் வழங்கப்படுவதுடன், அதற்கு குறைவான காலங்களுக்கு புள்ளிகள் வழங்கப்படமாட்டாது)

**2. கல்வித் தகைமைகள்** **அதிகபட்ச மதிப்பெண் 10**

- 2.1 தத்துவஞானி (PhD) - புள்ளிகள் **10**
- 2.2 தத்துவவாதி (M Phil) - புள்ளிகள் 07
- 2.3 பட்டப்பின் பட்டம் - புள்ளிகள் 05
- 2.4 பட்டப்பின் பட்ட டிப்ளோமா - புள்ளிகள் 03

(வினைத்திறன் தடைதாண்டலில் இருந்து விடுவிப்பதற்கு கவனத்திற்கொள்ளப்பட்ட தகைமைகளைத் தவிர வேறு கல்வித்தகைமைகள் மாத்திரம் மேற்படி புள்ளிகள் வழங்கப்படுவது தொடர்பாக கவனிக்கப்படுவதுடன், ஒரு சான்றிதழுக்கு/மிக உயர்வான தகுதிக்கு மாத்திரம் புள்ளிகள் வழங்கப்படும். மேலும் பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் ஏற்றுக்கொள்ளப்பட்ட பல்கலைக்கழகம்/நிறுவகங்களில் பயின்ற, சேவை பிரமாணக்குறிப்பில் குறிப்பிடப்பட்டுள்ள அல்லது கல்விச் செயலாளரினால் தீர்மானிக்கப்படுகின்ற கல்வித்துறைக்குரிய கல்வித் தகுதிகள் தொடர்பாக மாத்திரம் உரிய புள்ளிகள் வழங்கப்படும்)

**3. துறையில் சேவை அனுபவம்** **அதிகபட்ச மதிப்பெண் 15**

(உரிய நியமன அதிகாரிகளினால் வெளியிடப்பட்ட முறையான நியமனக்கடிதங்களுக்காக மாத்திரம் அதிகபட்ச வரம்பிற்கு உட்பட்டு புள்ளிகள் வழங்கப்படும்)

3.1 பாடசாலை முகாமைத்துவ அனுபவம் புள்ளிகள் **10**

**(**இ.க.நி.சே **I** ஆம் தரத்தில் அங்கீகரிக்கப்பட்ட அதிபர் பதிவிக்கு ஒரு வருடத்திற்கான புள்ளிகள் **1)**

3.2 அலுவலக முகாமைத்துவ அனுபவம் புள்ளிகள் **10**

**(**அதிபர் பதவியைத் தவிர இலங்கை கல்வி நிர்வாக சேவை **1** ஆம் தரத்தில் வேறு பதவியொன்றில் ஒருவருட சேவைக் காலத்திற்காக வழங்கப்படும் புள்ளிகள் 1**)**

**4. படைப்பாற்றல் மற்றும் தொழில் விருத்தி** **அதிகபட்ச மதிப்பெண் 15**

**4.1** தொழில்த்துறைக்குரிய ஆராய்ச்சிகள் புள்ளிகள் **10**

**(**பட்டப்பின் பட்டத்திற்கு **/** பட்டப்பின் பட்ட டிப்ளோமா தொடர்பாக சமர்ப்பிக்கப்படும் ஆய்வுக்கட்டுரைகளுக்கான ஆராய்ச்சிகள் **/** ஆய்வுக்கட்டுரைகள் தொடர்பில் புள்ளகள் வழங்கப்படமாட்டாது என்பதுடன் தொழிற்துறைக்குரிய பிரபல கலந்துரையாடல் மன்றத்திற்கு சமர்ப்பிக்கப்பட்ட முறையாக பூர்த்திசெய்யப்பட்ட ஒரு ஆராய்ச்சி அறிக்கைக்கு 05 புள்ளகள் என்ற ரீதியில் ஆகக்கூடிய ஆராய்ச்சிகளுக்காக 02 புள்ளிகள் வழங்கப்படும்)

**4.2** வெளியிடப்பட்ட சஞ்சிகைக்ள, கடிதங்கள், வெளியீடுகள் போன்றவை **புள்ளிகள் 05**

(பாடப்புத்தகங்கள் மற்றும் அவற்றை சார்ந்த குறிப்பு புத்தகங்களுக்கு புள்ளிகள் வழங்கப்படமாட்டாது என்பதுடன், கல்வி நூல் வெளியீட்டு ஆலோசனை சபை மூலமாக அங்கீகரிக்கப்பட்ட புத்தகங்களுக்கு மாத்திரம், பத்திரிகை மற்றும் சஞுசிகைகளில் வெளியிடப்பட்ட

கட்டுரைககள், அறிக்கைகள் அல்லது வெளியீடுகள் தொடர்பாக புள்ளிகள் வழங்கப்படும்போது கல்விச் செயலாளரினால் நேர்முகத் தேர்வின் போது புள்ளிகள் வழங்கப்படுவது பொருத்தமானதென தீர்மானிக்கப்படும் வெளியீடுகள் தொடர்பாக மாத்திரம் ஒரு வெளியீட்டிற்கு 02 புள்ளிகள் வீதம் ஆக்ககூடிய 03 வெளியீட்டுகளுக்காக புள்ளிகள் வழங்கப்படும்.)

**5. கணினி கல்வியறிவு தொடர்பான அறிவு** **அதிகபட்ச புள்ளிகள் 05**

(செயற்பாட்டு மென்பொருள், பயன்பாட்டு மென்பொருள் கையாளுதல் தொடர்பான செயன்முறை அறிவு மற்றும் கணினி வன்பொருள் தொடர்பான அடிப்படை அறிவை பரீட்சித்துப்பார்க்கப்படும்.)

**6. ஆங்கில மொழியின் புலமை** **அதிகபட்ச புள்ளிகள் 05**

(ஆங்கில மொழியை கையாள்வது தொடர்பான செயன்முறை பயன்பாடு மற்றும் திறனை பரீட்சித்துப் பார்க்கப்படும்.)

**7. சேவை மதிப்பீடு / பாராட்டுச் சான்றிதழ் / விருது சான்றிதழ் / வெற்றிகள் அதிகபட்ச புள்ளிகள் 05**

(பொது மாதிரி படிவ இலக்கம் 230 பீ மூலமாக தாபனத் தலைவரினால் வழங்கப்பட்டுள்ள பாராட்டுகள்/சேவை மதிப்பீட்டிற்காக மாத்திரம் ஒன்றுக்கு 01 புள்ளி வீதம் அதிகபட்ச புள்ளிகள் 05 தொடர்பாக)

**8. சமர்ப்பித்தல்** **அதிகபட்ச புள்ளிகள் 10**

உங்களுடைய நிறுவனத்தில், (பாடசாலை / கல்வி அமைச்சு / மாகாணக் கல்வித் திணைக்களம் / வலய அலுவலகம் / கோட்டக் காரியாலாம்) நீங்கள் பணிகளை நிறைவேற்றும்போது, கல்வி முறைமையின் பண்புத்தரம் மற்றும் விளைத்திறனை அதிகரிப்பதற்காக அடிப்படையான சம்பவம் ஒன்றை அடிப்படையாகக் கொண்டு அதை பகுப்பாய்வு செய்து மேற்கொள்ளப்படும் விளக்கப்படுத்தலுக்காக பின்வருமாறு புள்ளிகள் வழங்கப்படும்.

| | | |
|---|---|---|
| **I** | **பிரவேசம் மற்றும் அறிமுகம்** | **- புள்ளிகள் 2** |
| **Ii** | **உள்ளடக்கம்** | **- புள்ளிகள் 2** |
| **Iii** | **நேர முகாமைத்துவம்** | **- புள்ளிகள் 2** |
| **1v** | **சமர்ப்பிக்கப்படும் விதம் -** | **- புள்ளிகள் 2** |
| **V** | **முடிவு மற்றும் தீர்வு** | **- புள்ளிகள் 2** |

அதற்காக கணினி மூலமாக (Power Point) அல்லது வேறு பொருத்தமான ஊடகங்கள் மூலமாக 05 வினாடிகள் வாய்மூல விளக்கக்காட்சியினை முன்வைப்பதுடன் உங்களால் கல்விக்குரிய கடின நகலாக முன்வைக்கப்படும் விடயங்கள் நேர்முகத்தேர்வுக் குழுவிற்கு வழங்கப்படல் வேண்டும்

**9. நேர்முகத்தேரிவின் போது காட்டப்படும் ஒட்டுமொத்த திறன்** **அதிகபட்ச புள்ளிகள 05**

**100**